செ.வெ.எண்: 3 நாள் : 13.3.2023

# *நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ. 27 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய மற்றும் முதல் மருத்துவ கிடங்கு திருப்பூர் வடக்கு ரோட்டரி சங்கத்தின் சார்பில் திருப்பூர் மாநகராட்சிக்கு அர்பணிக்கப்பட்டது.*

---

திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.பவன்குமார் ஜி.கிரியப்பனவர், இஆப., அவர்கள் தலைமையில் இன்று (13.3.2023) அவிநாசி சாலையில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் திருப்பூர் மாநகராட்சி மற்றும் திருப்பூர் வடக்கு ரோட்டரி சங்கம் இணைந்து நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 50 சதவீத பங்களிப்புடன் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட மருந்து கிடங்கு கட்டிடத்தினை மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் மற்றும் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.க.செல்வராஜ் அவர்கள் முன்னிலையில் மருத்துவ பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

இந்த புதிய மருந்து கிடங்கில் 1300 ச.அடியில் 7 அறைகள் அமைக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 17 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் புதிதாக கட்டப்பட்டு வரும் 34 மக்கள் நல்வாழ்வு மையங்கள் ஆகிய மருத்துவமனைகளுக்கான மருந்துகள் இந்த கிடங்கில் வைக்கப்படும்.

இந்நிகழ்வில் துணை மேயர் திரு.ரா.பாலசுப்ரமணியம், 2வது மண்டல தலைவர் திரு.ர.கோவிந்தராஜ், சுகாதார குழுத் தலைவர்/மாமன்ற உறுப்பினர் (வார்டு – 57) திருமதி.கே.கவிதா, மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன், உதவி ஆணையாளர் திரு.C.கண்ணன், திருப்பூர் வடக்கு ரோட்டரி டயாலிசிஸ் டிரஸ்ட், தலைவர் Rtn.MD.V.பாலசுப்ரமணியன், திருப்பூர் வடக்கு ரோட்டரி சங்க திட்ட தலைவர் Rtn.MPHF.K.தமிழரசன், திட்ட பொறியாளர் Rtn. P.R. தினேஷ், தலைவர் 21 - 22 Rtn.MD.G.சுரேந்தர், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் மாநகராட்சி.**

